**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.165 /2021**

**Deposition of P.W.** 2

Name : செந்தில்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.01.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் சுருளோடு, மங்கலதறையில் வசித்து, பால்வெட்டும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அ.சா.1 எனது மனைவி. எதிரியின் மனைவியை எங்கள் ஊரை சேர்ந்த சஜீவ் என்பவர் எங்கோ அழைத்து சென்று விட்டார். அதற்கு நான் தான் காரணம் என்று என்னை அடிக்கடி மிரட்டி வந்தார். இந்நிலையில் 19.04.2021ம் தேதி இரவு 10.00 மணியளவில் பொன்மனை சந்திப்பில் வைத்து நான் பால்வெட்டும் வேலைக்கு ஆள் பார்த்து விட்டு வரும் போது மணி என்பவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது எதிரி இருசக்கர வாகனத்தில் வந்து என்னை பார்த்து பிண்டாமோனே, தேவிடியா பயலே என்று கெட்டவார்த்தைகள் பேசி வெட்டுக்கத்தியால் எனது தலையின் இடது பக்கத்திலும், உச்சந்தலையிலும், இடது பின்னந்தலையின் கீழ் பகுதியிலும் வெட்டினார். வெட்டு பட்ட உடன் எனக்கு நினைவு

இல்லாமல் விழுந்து விட்டேன். மணி மற்றும் ராஜு ஆகியவர்கள் குலசேகரம் மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். நடவடிக்கை எடுப்பதற்காக என் மனைவி புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வெட்டுக்கத்தியால் தான் எதிரி என்னை வெட்டினார். அது சா.பொ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சஜீவ் என்ற ஸ்டாலின் தற்போது எங்கிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. மேற்படி சஜீவ் எனது நண்பர் தான். எதிரியும் எனது நண்பர் தான். ஸ்டாலின் எதிரியின் மனைவியை கூட்டி சென்றதால் எங்களுக்குள் மனகசப்பு என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னர் எதிரி என்னை எந்த தேதி, எத்தனை மணிக்கு மிரட்டினார் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் பால்வெட்டுவதற்கு ஆள் பார்த்து விட்டு இருசக்கர வாகனத்தில் தான் வந்தேன். நான் வந்த பிறகு தான் எதிரி சம்பவ இடத்திற்கு வந்தார். நான் சம்பவ இடத்திற்கு வரும் போது எதிரி அங்கு நின்று கொண்டிருக்கவில்லை. அதன் பிறகு தான் வந்தார். எதிரி பால்வெட்டும் தொழில் செய்து வருகிறார். மரம் வெட்டும் வேலைக்கும் போவார். எதிரி சம்பவ நாளன்று வைத்திருந்த வெட்டுக்கத்தி கூர்மையான வெட்டுக்கத்தி என்றால் சரிதான். எங்குளுக்குள் அப்போது பேச்சுவார்த்தை நடக்கவில்லை. எதிரி வண்டியிலிருந்து இறங்கிய உடன் கெட்டவார்த்தை பேசி வெட்டி விட்டார். நான் ஈஞ்சகோட்டிலிருந்து – சுருளோடு செல்வதற்காக பொன்மனை சந்திப்பு வந்தேன். சம்பவத்தின் போது கடைகள் பூட்டி தான் இருந்தது. எதிரி சுருளோட்டிலிருந்து – பொன்மனை நோக்கி வந்தார். நான் குலசேகரத்திலிருந்து – சுருளோடு

வரும் சாலையில் இடது பக்கம் (கிழக்கு பக்கமாக) வண்டியை நிறுத்தியிருந்தேன் என்றால் சரிதான். பொன்மைன சந்திப்பில் உள்ள கடைகள் பற்றிய விபரம் எனக்குத் தெரியும். சாலையின் கிழக்கு பக்கம் வைத்து சம்பவம் நடந்தது. சம்பவ சமயம் கொரோனா ஊரடங்கு காலக்கட்டம் என்றால் சரிதான். சம்பவ சமயம் கடைகள் அடைத்திருந்தது. ஆட்கள் இல்லை. சம்பவம் முடிந்து என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. சம்பவம் முடிந்த உடன் யார் வந்தார்கள், யார் என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. 3 வெட்டுகளையும் நான் மருத்துவரிடத்தில் காண்பித்தேன். 3 வெட்டுகளுக்கும் எனக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. எனக்கு 3 நாட்கள் கழித்து எனக்கு சுயநினைவு வந்தது. சுயநினைவு வந்த போது நான் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் இருந்தேன். சம்பவத்தின் போது எனது உடைகளில் ரத்தம் பட்டிருந்தது. ரத்தம் பட்ட உடைகளை போலீசார் கைப்பற்றினார்களா என்று எனக்குத் தெரியாது. 09.45 மணிக்கு பொன்மனை சந்திப்பிற்கு வந்தேன். வெட்டு பட்ட உடன் நான் மயக்கமாகி விட்டேன். அதன் பிறகு நடந்த சங்கதிகள் எனக்குத் தெரியாது. நான் சொன்ன நேரத்தில். சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில், எதிரியால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மனைவியை ஸ்டாலின் அழைத்து சென்றதிலிருந்து எனக்கும,. எதிரிக்கும் மனகசப்பு இருந்து வந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரியின் மீது கொண்ட விரோதத்தால் அவர்மீது பொய் வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 165/2021**

**Deposition of P.W.** 3

Name : ராஜேந்திர பிரசாத்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.01.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் பொன்மனையில் வசித்து வருகிறேன். நான் Stationary கடை வைத்துள்ளேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். 19.04.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை அடைத்து விட்டு வெளியே வரும் போது ஐயோ என்று சத்தம் கேட்டது. நான் ஓடி வந்து பார்க்கும் போது அ.சா.2 ரத்த வெள்ளத்தில் கிடந்தார். எதிரி வெட்டுக்கத்தியால் மூன்று முறை அ.சா.2ஐ வெட்டினார். நான் பயந்து போய் ஓடி சென்று வேறு ஆட்களை கூட்டி வந்து ஆம்புலன்ஸ் மூலம் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அ.சா.2ன் நண்பர் வேறு ஒருவரின் மனைவியை கடத்தி சென்றது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையில் எதிரி அ.சா.2ஐ வெட்டி விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் Stationary கடை வைத்துள்ளேன். அ.சா.2 எனது மருமகன். சம்பவ இடம் எனது கடையிலிருந்து 50 அடி தூரம் இருக்கும். நான் பார்க்கும் போது வெட்டு பட்டு கிடந்தவரின் பக்கத்தில் வேறு யாரும் இல்லை. நான் பார்க்கும் போது அ.சா.2 ரத்த வெள்ளத்தில் கிடந்தார். எதிரி அருகே வெட்டுக்கத்தியுடன் நின்றார். சம்பவ நாள் கொரோனா ஊரடங்கு நாள் என்றால் இல்லை. நான் பயந்துபோய் ஆட்டோ பிடிக்க சென்று

திரும்ப வரும் போது ஆம்புலன்சில் அனுப்பி வைத்து விட்டார்கள். வெட்டு பட்டவர் அந்த இடத்தில் இல்லை. எதிரியும் இல்லை. சம்பவ இடத்தில் நிற்க வில்லை. உடனடியாக அங்கிருந்து சென்று விட்டேன். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதை குலசேகரம் காண்வென்ட் மருத்துவமனையில் சொன்னார்கள். முதலில் குலசேகரம் காண்வென்ட் மருத்துமனைக்கு சென்றுள்ளார்கள். எதிரி வைத்திருந்த வெட்டுக்கத்தி கூர்மையான சிறிய வெட்டுக்கத்தி தான். நான் போலீசாரிடம் தற்போது சொன்ன விபரங்களை தான் சொன்னேன். எனது கடைக்கு பக்கத்து கடையின் பெயர் ஜாபியா மெடிக்கல். எனது கடை பொன்மனை சந்திப்பிலிருந்து வலியாற்றுமுகம் செல்லும் சாலையில் உள்ளது. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் அதை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கொரோனா காலக்கட்டம் என்பதால் கடைகள் 10.00 மணி வரை இயங்குவதற்கு அனுமதி இல்லை என்றும், சம்பவத்தை பார்த்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காயம்பட்டவர் எனது மருமகன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.